REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 2௨ திங்கள் (16—5—55) ★ ★ வெளியீடு: வைகாசி 3௨ செவ்வாய் (17—5—55) [இதழ் 286

தனுஷ்கோடி கடல் அரிப்பு: பிள்ளையார் பாதுகாப்பான இடத்தில் குடிபுகுந்தார்!

தனுஷ்கோடியில் கடல் அரிப்பு நாளுக்குநாள் அங்குள்ளோருக்கு அச்சத்தைத் தரும் வகையில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 30 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட விநாயகர் கோவில் ஒன்றிலிருந்து கடல் இரண்டு மைல் தொலைவிலிருந்தது. ஆனால் இப்போது அந்தப் பிள்ளையார் கோவிலையே அகற்றி வேறோர் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுபோக வேண்டிய அளவுக்குக் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

'சந்தான கணபதி' என்ற அந்தப் பிள்ளையார் இப்போது 'வரசித்தி விநாயக'ருடன் குடிபுகுந்துவிட்டாராம்!

தடையை நீடிக்க கவர்னர் உத்தரவு

அகாலிதள பொதுச்செயலாளர் கைது

பஞ்சாப் மொழி மாநிலக் கிளர்ச்சி வலுக்கிறது

அமிருதசரஸ், மே 15—

பஞ்சாப் மொழிவழி மாநிலம் கோரி சீக்கியர்கள் நடத்தும் கிளர்ச்சி மேலும் வலுத்து வருகிறது.

'பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டும்,' 'மகா பஞ்சாப் மாநிலம் வேண்டும்,' என்று குரல் எழுப்பக்கூடாதென விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு மேலும் இரண்டு மாதங்கட்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

கவர்னர், அந்தத் தடையுத்தரவை நீடித்துப் பிரகடனம் செய்துள்ளார்.

அகாலி தள பொதுச்செயலாளரான கியானி கர்தார் சிங், இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மாநிலமெங்குமுள்ள அகாலி தள மாவட்டத் தலைவர்களும், சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுவின் இரு பொதுச்செயலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தமாக இதுவரை 128 பேர் கைதாகியுள்ளனர் எனத் தெரிகிறது.

அமிர்தசரஸ் நீதிபதி 144-சட்டப் பிரிவின்கீழ் விதித்திருந்த தடையுத்தரவு இன்று இரவுடன் முடியவிருந்தது; ஆனால், அந்த உத்தரவை மேலும் இரு மாதங்களுக்கு நீடித்து கவர்னர் உத்தரவு பிறப்பித்துவிட்டார்,

★

மாஸ்டர் தாராசிங் மீது வழக்கு

மாஸ்டர் தாராசிங் மீதும் இதர அகாலிதளத் தொண்டர்கள் மீதும் 183-ம் பிரிவுப்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

நகர நீதிபதி ஹர்தயால் சிங், மாஸ்டர் தாராசிங் மற்றும் இதரர் மீதும் உள்ள குற்றப்பத்திரிகையை வாசித்தார்.

மாஸ்டர் தாராசிங்குடைய வழக்கறிஞர் இந்த வழக்குகளை வேறு நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென்றும், ஏனெனில், இச்சம்பவத்தை நீதிபதிகண்ணால் கண்டவர் என்றும் கோரியதாகத் தெரிய வருகிறது.

வழக்கு மே 16-ம் தேதிக்குஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆதிக்கம் அகலுகிறது — சுதந்திரம் அரும்புகிறது!

சைகோன், மே 13—

வட வியட்நாமில் கடந்த எழுபது ஆண்டு காலமாக நிலவி வந்த பிரெஞ்சு ஆட்சி இன்றுடன் முடிவுற்றது. அதன் அறிகுறியாக வட வியட்நாமில் உள்ள ஹைபாங் நகரில் இதுவரை பறந்துகொண்டிருந்த பிரெஞ்சுக் கொடியை சகல இராணுவ மரியாதைகளுடன் வட வியட்நாமின் பிரெஞ்சுத் தளபதி இறக்கிவைத்தார்.

இந்த சம்பவம் எவ்வித ஆடம்பரமுமின்றி எளிய முறையில் நடைபெற்றது. சிறியதொரு பிரெஞ்சுப் படையைத் தவிர, மற்ற எல்லா அந்நியத் துருப்புகளும் இங்கிருந்து உடனடியாக தங்கள் நாட்டிற்குப் பயணமாகிவிட்டன.

இரண்டு லட்சம் மக்கள் தொகை உள்ள இத்துறைமுக நகரம் பிரெஞ்சுக் கொடி இறக்கப்படுவதற்கு முன்னமேயே வியட்மின் இராணுவத்தின் வசம் வந்துவிட்டது.

இந்தச் சம்பவத்தின் நினைவாக இன்று, நகரில் உள்ள எல்லா தொழில் நிலையங்களும், கடைகளும் மூடப்பட்டிருந்தன. எல்லா இடங்களிலும் வியட்மின் ஆட்சிக் கொடியான மஞ்சள் நட்சத்திரமுள்ள செங்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இயந்திரங்கள், கருவிகள் உற்பத்தி

இந்தியாவிலேயே தயாரிக்க ஆலோசனை

எல்லா ரக இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் ஆகியவற்றை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றி மத்திய சர்க்கார் கைத் தொழில், வர்த்தக இலாகா தீவிரமாக ஆலோசனைகள் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்களின் அபிவிருத்திக்கு அதிக அளவு கவனம் செலுத்தப்பட இருப்பதால்தான் இந்த முயற்சிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

கான்பூர் வேலை நிறுத்தம்

14 நாட்களாகத் தொடருகிறது!

கான்பூர், மே 15—

கடந்த 14 நாட்களாக இங்கு நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது வீணாகிவிட்டதாம்.

மேலும் 5 பேர்களை போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

ஆஸ்டிரியா விடுதலை பெறுகிறது

ஒப்பந்தத்தில் 'நால்வர்' கையெழுத்திட்டனர்

வியன்னு, மே 15—

"ஐரோப்பாவிற்கே 'விடுதலை' வழங்கப்போகிறேன்; ஐரோப்பாவை ஒன்றுபடுத்த விரும்புகிறேன்" என்று, 'விடுதலை' என்ற புனிதமான சொல்லை தனது ஆதிக்கப்போக்கிற்குச் சூட்டிய இட்லரால் 1938-ல் அடிமைகொள்ளப்பட்ட ஆஸ்டிரியா, 17 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றுதான் இழந்துவிட்ட விடுதலையை மீண்டும் பெற்றிருக்கிறது.

1945-ல்தான், முதன் முதலில் ஜெர்மானிய ஆதிக்கப் பிடியிலிருந்து அந்நாட்டை ரஷ்யத் துருப்புகள் மீட்டன.

அதன் பிறகு யுத்த முடிவிலிருந்து, நான்கு வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் ஆதிக்கத்தில் ஆஸ்டிரியா இருந்தது.

இன்று, நான்கு வல்லரசு நாடுகளின் வெளிநாட்டிலாகா மந்திரிகளும் ஆஸ்டிரிய வெளிநாட்டிலாகா மந்திரியும், ஆஸ்டிரிய சுதந்திரத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

ஒப்பந்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள்ளாக நேச நாடுகளின் இராணுவங்கள் ஆஸ்டிரியாவிலிருந்து வெளியேறும் என்றும் தெரியவருகிறது.

விடுதலைக்கான ஒப்பந்தம் கையெழுத்தானதும், மாதா கோவில் மணிகள் முழங்க, வேதங்கள் ஓதப்பட்டு விசேட பூசைகள் நடந்தனவாம். நாட்டு மக்களும் குதூகலமாக விடுதலை விழாவைக் கொண்டாடினர் என்று தெரிகிறது.

இந்தியாவுக்கு உதவி

ரூ. 38 கோடி தருமாறு ஐசன்ஹோவர் சிபாரிசு

புதுடில்லி, மே 13—

அடுத்த ஆண்டில் (1955—56) இந்தியாவிற்கு 8½ கோடி டாலர் அதாவது சுமார் 38¼ கோடி ரூபாய்—உதவி செய்யவேண்டும் என்று அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர் அமெரிக்க சட்ட சபைக்கு சிபாரிசு செய்திருக்கிறார்.

'குடிப் பழக்கமுடையோருக்கு சர்க்கார் உத்தியோகம் கிடையாது'

மத்திய பிரதேச சர்க்கார் உத்திரவு

நாகபுரி, மே 15—

மத்திய பிரதேச மாநில சர்க்காரின் கீழ் உத்தியோகம் பார்க்க விரும்பும் எவரும் குடிப்பழக்கம் கொண்டவர்களாயிருக்க முடியாதென சர்க்கார் உத்திரவு ஒன்று கூறுகிறது.

'உத்தியோகங்களுக்கு ஆள் தேவை,' என்று வெளிவரும் விளம்பரங்களிலெல்லாம், "'உத்தியோகம் பெற்றபின் நான் குடிக்க மாட்டேன்' என்ற உறுதி மொழியை எழுத்து மூலம் அளிக்க வேண்டும்," என்ற நிபந்தனை விதியும் காணப்படுகிறதாம்.

உடல்நிலை காரணமாகவன்றி, வேறெப்போதாயினும் ஒரு சர்க்கார் ஊழியர் குடித்ததாகத் தெரிந்தால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது

அடுத்த பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று மக்கள்சபை சபாநாயகர் மாவ்லங்கர் தெரிவித்திருக்கிறார்.

கல்லூரி கல்வி பெற!

ஸீம்லா, மே 18—

கல்லூரியில் படிப்பதற்கு பணம் சம்பாதிக்கும்பொருட்டு மாணவர் ஒருவர், கள்ளத்தனமாக அபின் கடத்தி வியாபாரம் செய்ய நினைத்ததாகவும் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டபோது இத்தகவலை அவர் தந்ததாகவும் தெரியவந்துள்ளது.

ரமணிராய் என்பவரிடம் 9 தோலா 'கள்ள' அபின் இருந்ததாம். போலீசார் அவரைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

விபரம் கேட்ட நீதிபதி, கருணை காட்டி அவரை விடுவித்துள்ளார்.

பம்பாய் தொழிலாளர் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

22 பேர்கள் கைது; வழக்கு தொடரப்படும்

பம்பாய், மே 15—

வடக்கு பம்பாயில் அந்தேரி எனும் பகுதியிலிருக்கும் கில்பர்ஹில் கற்சுரங்கத் தொழிலாளர்கள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதினால் இருவர் படுகாயமுறவும், பலர் சாதாரண காயங்கள் படவுமானநிலை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த ஒருமாத காலமாக அந்த கற்சுரங்கத்தைச் சேர்ந்த 800 தொழிலாளர்கள், சம்பள உயர்வு, வாழ்க்கை வசதி ஆகியவை கோரி வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

நேற்றைய தினம் அவர்களுக்குப் பதிலாக வேறு தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதை அவர்கள் கண்டதும் ஆத்திரப்பட்டு, காவல் காத்து நின்ற போலீசாருடன் மோதிக்கொண்டனராம்.

போலீசார் தடியடி கொடுத்தனராம். கலைந்து செல்ல மறுத்தத் தொழிலாளர் கல்கொண்டு போலீசாரைத் தாக்க முற்பட்டதினாலேயே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போலீசார் 22 பேர்களைக் கைது செய்து, அவர்கள் மீது வழக்கு தொடர்ந்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

அணுகுண்டு பரிசோதனை ஓர்புறம்: ஆயுத பரிகரணப் பேச்சு மற்றோர்புறம்!

லாஸ்வேகாஸ், மே 15—

இங்குள்ள யூகாபிளாட் எனுமிடத்தில் மீண்டும் மற்றொரு அணுகுண்டு சோதனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த அணுகுண்டு வெடிப்பினால் ஏற்பட்ட ஒளி, இதற்கு முன்னர் நடைபெற்ற சோதனைகளின் போது ஏற்பட்ட ஒளியைவிட மிகப் பிரகாசமாக இருந்ததாம். புகைமண்டலமும் 40,000 அடி உயரத்திற்குமேல் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இந்த அணுகுண்டு 500 அடி உயரமுள்ள கோபுரம் ஒன்றின் மேலிருந்து வீசப்பட்டதாம். சுமார் 25 விதமான சோதனைகளுக்காக அது வெடிக்கப்பட்டதென்று தெரிகிறது.

புதுடில்லி, மே 15—

மத்திய சர்க்கார் அகதிகள் நல இலாகா விரைவில் கலைக்கப்பட்டுவிடும் என்று வெளியான வதந்திகளை அந்த இலாகா அமைச்சர் மேகர்சந்த் கன்னா மறுத்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 16—5—'55 திங்கள்

பாகிஸ்தான் பிடிவாதம்!

உலகில் முதல் மனிதன் தோன்றிய நாள் முதல், கணக்கற்ற நூற்றுண்டு கால வளர்ச்சிக்கான வரலாறு எழுதப் பெற்றிருக்கும் இன்றைய தினம் வரையில், மனித சமூகம் எத்தனையோ எண்ணற்ற அரசு முறைகளை தனக்குரியதாகப் பெற்றிருந்திருக்கிறது.

அரசு முறைகள், மனித அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கு ஒப்ப மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. எந்த ஒரு அரசு முறையையும், மனித சமூகம் நிரந்தரமானதாகப் பெற்றிருக்கவில்லை.

ஆனாலும், எல்லா அரசு முறைகளும், அந்த முறையால் ஆளப்படுகிற மக்களின் நல்வாழ்விற்காகவே பெரும்பாலும் இருந்து வந்தது எனக் கொள்ள முடியாது.

நவீன காலத்தில், ஒரு அரசு முறை, அந்த அரசு முறையால் ஆளப்படுகிற மக்களின் விருப்பத்தையும் ஒப்புதலையும் பெற்றதாக இருந்தால் தான் நீடித்திருக்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இருபதாம் நூற்றுண்டில், ஒரு நாட்டில் நிலவுவது எந்த ஒரு ஆட்சி முறையாயினும் சரி—குடியாட்சி, முடியாட்சி, இராணுவ ஆட்சி, தனி மனிதரின் சர்வாதிகார ஆட்சி, அன்னிய நாட்டவரின் ஆதிக்க ஆட்சி, அல்லது வேறெந்த ஆட்சியாயினுஞ்சரி—அது, அந்த ஆட்சிக்குட்பட்ட மக்களின் விருப்பத்தையும், ஒப்புதலையும் பெற்றிருக்காதவரை நீடித்திருக்க முடியாது — நீடித்திருக்கக்கூடாது என்பதை, எல்லா வகையாலும் மிகப் பிற்போக்கான நிலையில் உள்ள நாட்டு மக்கள்கூட உணரத் தலைப்பட்டு விழிப்புப் பெற்று வருகின்றனர் என்பது கண்கூடு.

இன்று ஒரு ஆட்சி முறை, 'நாகரிகமானது,' என்று கருதப்படுவது, அந்த ஆட்சிமுறை அதிகாரம் பெற்றிருக்கும் மண்ணின் அகல—நீள எல்லையையோ, அல்லது அந்த எல்லைக்குள் இயங்கும் ஆட்சி, அந்த மக்களுக்குத் தந்திருக்கும் உயரிய வளமிகு நல்வாழ்வையோகூட பொறுத்தது அல்ல; மாருக, எத்தனை விரிந்த எல்லையில் அதிகாரம் செய்யும் ஆட்சியாயிருப்பினும், அந்த எல்லைக்குள் வாழும் மக்களின் ஒப்புதலையும், விருப்பத்தையும் பெற்றிருப்பதைப் பொறுத்துத்தான், அது, 'நாகரிகமான நல்லாட்சி முறை' என்று கருதப்படும்.

இன்று பாகிஸ்தானில் வாழும் எழுரை கோடி மக்களும், 'ஏக இந்தியா' என்ற அரசியல் எல்லைக்குள் வாழ விரும்பாததால்தான்—'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதினால்தான், தனியாக, தனி எல்லை அமைத்துக் கொண்டு வாழ்கிருர்கள்.

'ஏக இந்திய' அரசியல் அமைப்பை ஒப்ப மறுத்து, தனித்து வாழ வேண்டுமென்ற எண்ணத்தை இன்றைய பாகிஸ்தான் மக்கள் பெற்ற நாளிலேயே, அன்றைய 'இந்தியா'விலிருந்து இன்றைய பாகிஸ்தானில் இருக்கிற வட மேற்கு எல்லைப்புற மாநிலத்தில் வாழும் 'பக்தூன்' என்ற வகுப்பு மக்கள், 'தாங்கள் பாகிஸ்தான் மக்களுடன் ஒன்றி வாழ விருப்பவில்லை,' என்ற காரணத்தைக் காட்டி, 'பக்தூனிஸ்தான்' என்ற தனி நாடு கோரிக்கையை வலியுறுத்திவருகின்றனர்.

மேற்கு பாகிஸ்தானுக்கு வடக்கேயுள்ள ஆப்கானியர்களும் பக்தூன்களுக்கும தங்களுக்குமிருக்கும் இன உறவையும், அதனால் ஊறும் இரத்த பாசத்தையும், அந்த உறவையும் பாசத்தையும் நிலைநாட்டும் சரித்திரத் தொடர்பையும் காரணமாகக் காட்டி, பாகிஸ்தான் உதயமான நாளிலிருந்தே 'பக்தூனிஸ்தான்' கோரிக்கையை ஆதரித்துவருகின்றனர்.

திராவிடர்கள் தனி இனத்தவர்கள்; இந்தோ-ஆரிய இனத்தவரான வடநாட்டவருடன் வாழ அவர்கள் விரும்பவில்லை. வடவர்கள், திராவிடர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக 'ஏக இந்தியா' அரசியல் அமைப்பு இருப்பதால், அந்த அமைப்பின்கீழ் வாழ அவர்கள் ஒப்பவில்லை என்ற அடிப்படையுடனும், வரலாற்று ஆதாரங்களுடனும் நாம் எழுப்பும் உரிமைக் குரலான 'திராவிட நாடு' கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து வருவதின் மூலம் தங்களின் ஆதிக்க வெறியை நிலைநாட்டிவரும வடநாட்டவர்கூட, 'பக்தூனிஸ்தான்' கோரிக்கைக்குத் தங்களின் 'மானசிக'மான ஆதரவைத் தந்து வருகின்றனர்.

'பெரும் தலைவர்களாயிற்றே!' என்ற காரணத்தினுல் மட்டுமே, 'பக்தூனிஸ்தான்' பிரச்சினை பற்றி வெளிப்படையான கருத்தறிவிக்காமலிருக்கின்றனர்.

'ஏக இந்தியா' அரசியல் வாதிகள், பக்தூனிஸ்தான் கோரிக்கைக்கு தங்களின் 'தார்மீக' ஆதரவைத் தருவதற்கு, 'ஏக இந்தியா ஆதிக்கத்திற்கு வேட்டு வைத்துவிட்டு தனி எல்லை கண்ட இவர்களின் நாடு துண்டாடப்பட வேண்டும்,' என்ற பழி தீர்க்கும் எண்ணமும் ஒரு காரணமாக இருக்கக் கூடும என, இன்று பாகிஸ்தானில் 'பக்தூனிஸ்தான் கூடாது—ஆகாது' எனக் கூறும் அரசியல்வாதிகள் கூறினும், அதில் ஆச்சரியமொன்றுமில்லை!

எப்படியிருப்பினும், 'பக்தூன்'கள், தாங்கள் பாகிஸ்தான் என்ற அரசியல் எல்லைக்குள் வாழ விரும்பவில்லை என்பது அங்குள்ள அரசியல் விழிப்புணர்வு பெற்றவரில் பெரும்பாலானவரின் கருத்தாக இருக்கிறது.

மேலும், 'பக்தூன்'களுக்கு ஆப்கானிய மக்களின் ஆதரவும் நிரம்ப இருக்கிறது என்பதையும், அந்த ஆதரவின் விளைவுதான், தனது மேற்குப் பகுதியை ஒரே மாநிலமாக ஆக்குவது என்று பாகிஸ்தான் முடிவு செய்தபோது அதற்கு எதிராக ஆப்கானிஸ்தானில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தின்முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களும், அதையொட்டி, 'இரு நாடுகளின் அரசியல் உறவையே முறித்துவிடக்கூடும்,' என்றஞ்சும் அளவுக்கு வளர்ந்துள்ள நெருக்கடியும என்பதையும் பாகிஸ்தான் சர்க்கார் மறந்துவிடக் கூடாது.

'ஒன்ருக வாழ விரும்பாத மக்களுக்கு 'ஒற்றுமை' உபதேசமும், 'உள்நாட்டு விவகாரம்' என்ற வாயடியும், ஒருக்காலும திருப்தி தர முடியாது.

ஆகவே, பாகிஸ்தான் சர்க்கார், தாங்கள் அந்தப் பிரச்சினையில் காட்டிவரும் வரட்டுப் பிடிவாதத்தைக் கைவிட்டுவிட்டு, விவேகமுடன் நடந்து கொண்டு, நாம் மேலே குறிப்பிட்ட 'நாகரீகமான அரசு முறை பாகிஸ்தானில் நிலவுகிறது,' என்ற நற்பெயரைப் பெற முன்வர வேண்டும்.

தேசீய மொழியின் 'தன்மை'யை தென்னுட்டு அறிவாளிகள் உணர்வராம்!

இந்தி திணிக்கப்படவில்லையாம்!

ஆர்வம் மட்டுமே ஊட்டப்படுகிறதாம்!

டாக்டர் கேஸ்கர் பசப்பு மொழி

"இந்தி மொழியை மக்கள் மீது திணிக்கும் பிரச்சினையே இல்லை,"

என்று, மத்திய அரசாங்க செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் கூறினராம்.

"நாடு முழுவதும்—குறிப்பாக இந்தி மொழி வழங்காத பகுதிகளில் 'இந்தி மொழி கற்றுக் கொள்ள வேண்டும்' என்ற ஆர்வத்தை ஊட்டுவதுதான் மிகத் தேவையானது," என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

"இந்தியை தேசீய மொழியாக ஏற்றுக்கொள்வதற்காக நியமிக்கப் பட்டுள்ள இந்தி குழு, விதிகளையும் முறைகளையும் வகுத்துத் தரவிருக்கிறது," என்றும் அவர் தெரிவித்தாராம்.

பூரியில், 'நிகில பாரத ராஷ்டிர பாஷ சம்மேளன'த்தின் ஆருவது ஆண்டு விழாவில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்திய மக்களில் (!) பெரும் பகுதியினர் (!) இந்தி மொழி பேசுபவர்களாக இருப்பதால்தான் இந்தி மொழி தேசீய மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

"தேசீய ஒற்றுமையும், பாரம்பரியமும், தேசீய மொழி ஒன்று இன்றி உருவாக்கப்பட முடியாது.

"இந்தியைத் தேசீய மொழியாக ஏற்றுக் கொள்வதினுல், தங்களின் மொழியும், அதன் இலக்கியங்களும் படுமோசமான அளவு பாதிக்கப்படும் என்ற சந்தேகம் தென்னுட்டவரிடம் வளர்ந்து வருகிறது;

"ஆனுல், தேசிய மொழி, எந்தப் பிராந்திய மொழி இலக்கியத்திலும் குறுக்கிடாது என்றும், மாருக, தேசிய இலக்கிய ஆக்கத்தை நோக்கி, விரிவான அளவில் ஒன்ருக வளரும் என்பதைத் தென்னுட்டில் உள்ள பல அறிவாளிகளும் உணர்வார்கள்."

யுத்தம் வந்தால்.....!

ரஷ்யா தோற்கடிக்கப்படும்?

லண்டன், மே 12—

"ஏதாவது ஒரு யுத்தம் இப்போது தோன்றுமானுல், அதில் ரஷ்யா நிச்சயமாக தோற்கடிக்கப்படும்; ஏனெனில், குண்டு வீசும் விமான அபிவிருத்தியில் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய மேற்கு நாடுகள் வெகு தூரம் முன்னேறியுள்ளன,"

என்று ஆல்பிரெட் கிரந்தர் என்ற 'நேட்டோ' தலைமை இராணுவ அதிகாரி கூறியிருக்கிருர்.

3,000 ரக மீன்கள்

வனவிலங்கு டைரக்டர் அறிவிப்பு

சென்னை, மே. 13—

இந்தியா முழுமையிலும் மொத்தம் 3,000 தனிப்பட்ட ரகங்களைச் சேர்ந்த கடல் மீன்கள் இருப்பதாகவும், மற்ற ரகங்களைச் சேர்ந்த 600 வகை மீன்கள் இருப்பதாகவும், சென்னை வனவிலங்கு சாத்திர இலாகா டைரக்டர் தெரிவித்திருக்கிருர்.

'மச்ச விநோதம்' என்பது பற்றி முதன் முதல் ஒரு புத்தகம் வெளியிட்டதே இந்தியாதான் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

25,000 பெண்கள் பணி புரிவர்!

பெங்களூர், மே. 13—

சுமார் 25,000 பயிற்சி பெற்ற பெண்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுமையிலும் தேசீய விரிவுபடுத்தும் திட்டவேலைகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

பெரியாறு மின்சாரத் திட்டம்: தொழில் வளர வழிகோலும்!

999 ஆண்டு குத்தகை விவரம்

பெரியாறுத் திட்ட வேலை நடந்துவரும் காலத்தில் இப்பிரதேசத்திலுள்ள அனேகம் பேருக்கு வேலை கிடைக்கும்; இது பூர்த்தியானவுடன், மின்சார சக்தி மலிவாகக் கிடைக்கக் கூடுமாகையால், மாநிலத்தில் புதிய தொழில்கள் வளர்ந்தோங்க வழி ஏற்படும். பல கிராமங்களில் மின்சார வசதி ஏற்பட்டு, நீர்ப்பாசனம், குடிசைத் தொழில்களுக்கும் மின்சாரம் கிடைக்கும்; தெருக்களிலும், வீடுகளிலும் மின்சார விளக்குகள் போடப்படும்.

சென்னை மாநிலத்தின் மின்சாரத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்து வைப்பதற்கான நீர்விசை மின்சாரத் திட்டங்களில், சென்னை மாநிலத்தில் இது ஐந்தாவதாகும்

சென்னை மாநிலத்தில் மின்சார வினியோகத்திற்கான முக்கிய ஆதாரம் பைக்காரா, மேட்டூர், பாபனசம், மோயாறு நீர்விசை மின்சார நிலையங்கள், சென்னையிலும், மதுரையிலும் உள்ள நீராவி மின்சார உற்பத்தி நிலையங்கள் கொண்ட இணைப்புத் தொடரேயாகும். இணைப்புத் தொடரின் மின்சார உற்பத்தி சக்தியை அதிகரிப்பதற்காக மாநில சர்க்கார் புதிய நிலையங்களை ஏற்படுத்தி வருகின்றனர்; இதற்கான புதிய பெரிய திட்டங்களில் ஒன்று தான் பெரியாறு நீர்விசை மின்சாரத் திட்டமாகும்.

பெரியாறு, திருவாங்கூர்—சென்னை மாநிலங்களுக்கிடையே உள்ள கன்னிமலையில் உதயமாகி, மேற்கு முகமாக ஓடி, கரங்கனூருக்கு அருகில் அரபிக் கடலில் முடிவடைகிறது. இது பூராவும், திரு-கொச்சி மாநிலத்திலேயே சுமார் 130 மைல்கள் ஓடுகின்றது.

இவ்வாற்று நீரை சென்னை மாநிலப் பிரதேசங்களில், 999 - ஆண்டுகளுக்குப் பாசனத்துக்கு உபயோகப்படுத்துவதற்காக ஒரு குத்தகை ஏற்பாட்டை சென்னை மாநில சர்க்கார், திரு-கொச்சி சர்க்காருடன் சென்ற 1886-ம் ஆண்டில் செய்துகொண்டனர். தனிக்குடிக்குக் கிழக்கே 12-வது மைலில் பெரியாற்றில் ஒரு அணை 1893-ம் ஆண்டில் கட்டப்பட்டது; இதன் தண்ணீர், குன்றுகள் மூலமும், மலையைக் குடைந்தமைக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் மூலமாகவும் கிழக்கே வைகையாற்றுப் படுகைக்குக் கொண்டுபோகப்பட்டது. வைகையிலிருந்து புறப்படும் கால்வாய் மதுரை மாவட்டத்தில் சுமார் 1,50,000 ஏகர் நிலத்திற்கு பாசன வசதி அளித்துவருகிறது.

வைகையாற்றின்மீது ஒரு அணை கட்டும் யோசனையையொட்டி, நீர்விசை-மின்சாரத் திட்டத்தின் அளவும் விரிவுபடுத்தப்பட்டது. ஆயக்கட்டின் நீர்ப்பாசனத் தேவைகள் ஓரளவு வைகை நீர்த் தேக்கத்தினுல் பூர்த்தி செய்யப்பட்டுவிடுமாகையினுல், பெரியாறு தண்ணீர் மின்சார உற்பத்திக்கு உபயோகப் படுத்தப்படும்.

மின்சார உற்பத்தித் திட்டம்

பெரியாறு மின்சார உற்பத்தித் திட்டத்தின்படி முதற்கட்டத்தில், ஒவ்வொன்றும் 35,000 கிலோவாட் உற்பத்தி செய்யக்கூடிய மூன்று உற்பத்தி 'செட்'கள் அமைக்கப்படும்; 10 ஆண்டுகளுக்குப் பின் நாலாவது 'யூனிட்' நிர்மாணிக்கப்படும். இப்பொழுதுள்ள பெரியாறு அணைக்கட்டின் உயரம் 150 அடி; இதில் 1,56,320 லட்சம் கன அடி தண்ணீர் தேங்குகிறது. மலைகள் மூலம் செல்லும் 5,887 அடி நீளமுள்ள சுரங்கப் பாதையின் மூலம், விஞடிக்கு 1,300 கன அடி தண்ணீர் பாயக்கூடும். புதிய திட்டத்தின்படி, இது விஞடிக்கு 1,600 கன அடி தண்ணீர் பாயும் வகையில் விரிவுபடுத்தப்படும். இத் தண்ணீர், 30 லட்சம் கன அடி தண்ணீர் தேங்கக்கூடிய ஒரு குளத்தில் பாயும்படி செய்யப்படும். தண்ணீரைத் தேக்கி நிறுத்தும் முன் அணை 93 அடி உயரமுள்ளதாக இருக்கும். முதல் சுரங்கப் பாதையைப்போல் பெரிதாக மற்றொரு சுரங்கப் பாதை 4,188 அடி நீளத்துக்கு அமைக்கப்பட்டு, இக் குளத்திலிருந்து புறப்பட்டு, மலைக்கு 3,500 அடிக்குக் கீழே உள்ள மின்சார உற்பத்தி நிலையத்திற்குச் செல்லும் குழாய்களின் மேல் பாகத்திற்குப் போய்ச்சேரும். இக்குழாய்கள் ஒவ்வொன்றும் விஞடிக்கு 400 கன அடி தண்ணீரை எடுத்துச் செல்லும். மின்சார அபிவிருத்திக்கான தலைநிலை 1,263 அடியாகும்.

சென்னை மின்சாரத் தொடரில், பலவிடங்களிலும் மின்சாரம் தேவைப்படும் ஊர்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்காக சுமார் 240 மைல் நீளத்துக்கு மின்சார 'லைன்'கள் போடப்படும்.

திட்டத்திற்கு ஆரம்பத்தில் ரூ. 6·75 கோடி செலவாகும்; 10 ஆண்டுகளில் மொத்தச் செலவு ரூ. 10·47 கோடிக்கு உயர்ந்துவிடும் என்று கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

சென்னை 21-வது வட்ட தி. மு. கழகம்

சென்னை அயன்புரம், 21-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், 30—4—55 மாலை 6-30 மணிக்கு நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், வரவு-செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், செயற்குழு உறுப்பினரான தோழர் வை. நெடுஞ்செழியன் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, அவருக்குப் பதிலாக தோழர் ரங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை 4-வது வட்ட தி. மு. கழகம்

8—5—55 காலை 9 மணிக்கு, சென்னை 4-வது வட்ட தி. மு கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் த சேதுராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, சென்னை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் சே. எம். கண்ணபிரான் அவர்களைப் பாராட்டி தோழர்கள் ஏ. பெ. முத்தையா, டி. இராசு, எம். எஸ். கே. உலகநாதன், கி. இராமலிங்கம் ஆகியோர் பேசினர். பின்னர் தோழர் கண்ணபிரான் அவர்கள், தமக்குத் தெரிவித்துக்கொள்ளப்பட்ட பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார் பின்னர் கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து நடைபெற்றது.

சென்னை 32-வது வட்ட தி. மு. கழகம்

8—5—55 காலை 9 மணியளவில் சத்தியமூர்த்தி பூங்காவில் தோழர் டி ஏ. பி. துரை தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் கழகக் கணக்குகள் அனைத்தும் புதிய நிர்வாகிகளிடம்ஒப்படைக்கப்பட்டன பொங்கல் விழா வரவு—செலவு கணக்குகள் பரிசீலித்த பின்னர், துணைச் செயலாளரின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், தோழர் என். சி. மணி அவர்கள் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அடுத்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் பரிசீலனை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்

8—5—55ல், சென்னை, இராயபுரம் 'அறிவகத்'தில் நடைபெற்ற சென்னை மாவட்ட முதல் செயற் குழுக் கூட்டத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக அவரைப் பாராட்டி வரவேற்றும், அவரைப் பொதுச் செயலாளராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த புதிய பொதுக் குழுவிற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில மாநாடு நிதிக்காக சென்னை மாவட்ட பங்கீட்டுத் தொகையைப் பூர்த்தி செய்ய சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்களையும், இரு நாடகங்களையும் நடத்த செயலாளர் மேற்பார்வையில் தோழர்கள் ஆர். டி. அரசு, சே. எம். கண்ணபிரான், இளஞ் சேரலாதன், ஆ. பொ. அரசு, சி ஆர். பாலசுந்தரம் ஆகிய ஐவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

கிளைக் கழகங்களுக்கும், மாவட்டத்திற்கும் உள்ள தொடர்பை நேர்படுத்தவும், முறைப்படுத்தவும், வலுப்படுத்தவுமான வகையில் முக்கியமான தீர்மானங்கள் மூன்று நிறைவேற்றப்பட்டன.

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகம்

8—5—55ல், கிளைக் கழகத்தில் நடைபெற்ற தேர்தலில், தோழர் தி. ம. பாலகிருட்டிணன் செயலாளராகவும், தோழர் இரா. இராசமாணிக்கம் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று, மேற்படிக் கிளையின் சார்பாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சென்னைமாவட்டச்செயலாளர் தோழர் இளம்பரிதி, துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் ஆகியோருக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. அவர்களிருவரையும் பாராட்டி தோழர்கள் டி. கே. இராசாபாதர், அ. இரகுநாதன் ஆகியோர் பேசினர்.

அந்திப்பாளையம் தி. மு. க.

1—5—55 காலை 11 மணிக்கு, கழகப் பணி மனையில் தோழர் இரா. தாமோதரன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கிளையின் அலுவலகத்திற்கென சொந்தக் கட்டிடம் ஒன்று வாங்குவதென்றும், அதற்கான வேலைகளைச் செய்யவும், பொருள் திரட்டவும் ஐந்து பேரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

உதகையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

9—5—55 மாலை 3 மணியளவில், போஸ் மைதானத்தில், தோழர் ஐயூப் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் க. அன்பழகன் வடநாட்டு ஆட்சியாளரால் தென்னாடு புறக்கணிக்கப்படுவதையும், திராவிட நாடு என் பிரிய வேண்டுமென்பதைப் பற்றியும் விளக்கி, விரிவுரையாற்றினர்.

மாயூரம் நகர தி. மு. க.

7—5—55 இரவு 8 மணிக்கு தோழர் என். கிட்டப்பா தலைமையில், தோழர் வி. ஏ. பாண்டியன் விறகுக் கடையில்நடைபெற்ற நகர கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 20-3-55, 10-4-55 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு-செலவு சரிபார்த்து ஒத்துக்கொள்ளப்பட்டதுடன், 1—6—55ல் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், மாநில மாநாட்டிற்கு நிதி திரட்டுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் மாவட்ட தி. மு. கழகம்

8—5—55 பிற்பகல் 2 மணிக்கு சேலம் கூட்டுறவு ஓய்வு விடுதியில், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், சேலம் அம்மாப்பேட்டை தோழர் இ. ஏ. ஆர். கிருஷ்ணன் அகால மரணம் அடைந்தமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்ட பின்னர், பொதுச் செயலாளராக இரா நெடுஞ்செழியன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கும், சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் மாநில மாநாட்டுத் திறப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், மாநில மாநாட்டு நிதி வசூலுக்காக மாவட்டச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய மூவருக்கு அனுமதி தந்தும், அவர்கள் தாங்களாகவே வேறு இருவரை தங்களுக்குத் துணை சேர்த்துக்கொள்ள அனுமதித்தும், மாவட்ட மாநாட்டின் மீதிப் பணத்தில் நகரக் கிளைக்குப் பங்கு கொடுப்பது பற்றி தலைமை நிலைய கருத்துப்படி நடந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதுரை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

8—5—55 காலை 10 மணிக்கு, திருப்பரங்குன்றம் குறவக்குளம் மடத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்றபோது, மாநில மாநாடு நிதிக்காகவும், மாவட்டக் கழகச் செலவுக்காகவும் ஒவ்வொரு சிற்றூர் கிளைக் கழகங்களும் ரூ. 20 வீதமும், முனிசிபல் நகரங்கள் ரூ. 100-க்குக் குறையாமலும், முடிந்த அளவு மே திங்கள் 20-ந் தேதிக்குள் கொடுப்பதெனவும், மாவட்டக் கழகத்தை மதுரை நகர் கழக அலுவலகத்தில் வைத்துக்கொள்வதென்றும், மாதம் ரூ. 15 வாடகை கொடுப்பதென்றும், திருமங்கலம் கிளைக் கழகப் பிரதிநிதி தோழர் ராசாக்குக்குப் பதிலாக தோழர் சு. ம. வ. நடராசனை மாவட்டப் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டும், திருப்பரங்குன்றம் பிரதிநிதி இரா. சு. அரசுக்கண்ணன் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, அவருக்குப் பதிலாக தோழர் சையது அலியை மாவட்டப் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டும், பொதுச் செயலாளர் அறிக்கைப்படி, திரு-கொச்சி பகுதிகளாகிய வண்டிப் பெரியார், மூணாறு பகுதியை மதுரை மாவட்டத்தில் சேர்த்திருப்பதை ரத்து செய்து, திரு-கொச்சி பகுதியோடு சேர்க்கும்படி கேட்டுக்கொண்டு, அந்தப் பகுதியில் இருந்து பொதுக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் கே. ஏ. கலையழகன் அவர்களுக்குப் பதிலாகத் தலைமைக் கழக அனுமதி வந்தவுடன் வேறொருவரை தேர்ந்தெடுப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்று திருப்பரங்குன்றம் தி. மு. கழகத் தோழர்கள் தெருக்களில் தோரணங்கள், வளைவு தட்டிகள் கட்டி அலங்கரித்திருந்தனர். மாவட்டப் பிரதிநிதிகளை பஸ் நிலையத்திலும், புகைவண்டி நிலையத்திலும் தொண்டர்கள் வரவேற்றனர். மாலை 4 மணியளவில் ஊர்வலம், பொதுக் கூட்டம் நடைபெற்றன. கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சந்தானம், பி. சமதர்மம், மு. வசனப்பித்தன், இரா. சு. அரசுக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தூத்துக்குடி— கீழச்சண்முகபுரம் தி. மு.க.

8—5—55ல், கழகப் பணிமனையில், தோழர் ஆ. பாலையா தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், பழைய நிர்வாகிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கணக்கு வகைகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. துவக்கத்தில் கிளைக்கழகப் புதிய நிர்வாகிகள் தேர்வுநடைபெற்றது. செயலாளர்: சு. பெருமாள்; துணைச் செயலாளர்: சு. தங்கச்சாமி; பொருளாளர்: பி. குருசாமி. செயற்குழு உறுப்பினர்கள்: ஆ. பாலையா, ஆர். தெட்சிணாமூர்த்தி, சா. செ. குருசாமி, கோ. ஜேம்ஸ், கே. வேல்சாமி, எஸ். எஸ். பி. சாமி, செ. மகராஜா.

பொன்னமராவதி தி. மு. க.

8—5—55 இரவு 9 மணிக்கு, தோழர் நல்ல சுப்பையா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், மாநிலமாநாடு நிதிக்கு பொன்னமராவதி கிளைக் கழகச் சார்பில் ரூ. 50-க்கும் அதிகமாக அனுப்புவதென்றும், தி. மு. கழக முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களையும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும், மாவட்டக் கழகச் செயலாளர், துணைச் செயலாளர்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள் அம்பில் தருமலிங்கம், பராங்குசம் ஆகியோரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வீரசோழபுரம் தி. மு. க.

8—5—55 காலை 10 மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் எஸ். இராசகோபால் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், புதிதாகக் கழகக் காரியாலயம் அமைப்பதெனவும்,ஜூன் திங்கள் 8-ந் தேதிக்குள் கழக 3-வது ஆண்டுவிழா நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்செந்தூர் தி. மு. க.

5—5—55ல், தோழர் எம். அற்புதம் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், ஜூன் திங்களில் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா நடத்துவதென்றும், ஆண்டு விழாவின்போது தென்றல் நாடக மன்றத்தாரால் 'கண்ணீர்த் துளி' என்ற நாடகம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டன.

கோபி நகர தி. மு. கழகம்

8—5—55ல், தோழர் ஏ. சி. இராமன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கடந்த 20—4—55, 1—5—55 ஆகிய இரு நாட்களில் நகர கழகச் செயலாளர் தோழர் என். கே. யாகூப் அவர்களின் தந்தையாரும், துணைவியாரும் முறையே இயற்கையெய்திடமைக்கு அனுதாபம் தெரிவித்தும், மே மாத இறுதிக்குள் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தி, அதுபோது மாநில மாநாட்டு நிதி தருவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கல்லக்குடி தி. மு. கழகம்

8—5—55 காலை 9 மணிக்கு, கழகப் பணி மனையில், தோழர் அ. தம்புசாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக ஆக்க வேலைகளையும், உறுப்பினர்களின் பொறுப்பையும் விளக்கி பேசப்பட்ட பின், கழக ஆண்டு விழாவை, ஜூலை 16-ந் தேதி நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குடந்தை தி. மு. கழகம்

8—5—55 காலை 11 மணிக்கு துவரங்குறிச்சி வடக்கு வீதியில் தோழர் எஸ். ஆர். இராதா இல்லத்தில், தோழர் சு. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், தி. மு. கழகப் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு மாவட்டக் கழக சார்பில் குடந்தை நகரில் வரவேற்பும் பாராட்டும் நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்-மாதுங்கா தி.மு.க.

8—5—55 மாலை 6 மணிக்கு இலாவியா கட்டிடத்தில், தோழர் தே. சா. நாதன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக முன்னாள் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டபின் தோழர்கள் யோ. தர்மராசன், பெ. வரதராசன், தொ. து. அன்புச்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் முன்னாள் பொதுச்செயலாளர் அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூர் (வ. ஆ.) தி. மு. கழகம்

12—5—55 இரவு 9 மணியளவில் சி. எம். எஸ் மன்றத்தில் தோழர் சி. எம். எஸ் பாலு தலைமையில் நடைபெற்ற கழகச்செயற்குழு கூட்டத்தில் புதிய பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும், 22—5—55 அன்று ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் தோழர் க. அன்பழகன்

கொல்லக்கோம்பை :

இவ்வூர் தி. மு. கழக ஆண்டு விழாவும், மே தின விழாவும், 7—5—55 சனி மாலை 6 மணிக்கு தோழர் சி. இல சுந்தரேசுவரன் தலைமையில் நடைபெற்றது. குன்னூர் தோழர் எஸ். அய்யுப் (தென்னன்) சிறிது நேரம் பேசிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் திராவிட மக்களின் உரிமைப் போரை விளக்கியும், தொழிலாளரின் நிலையை உயர்த்த கழகம் ஆற்றிவரும் பணியைத் தெளிவாக்கியும் சொற்பொழிவாற்றினர்.

கொல்லக்கோம்பை தி. மு. கழகச் சார்பில் கைத்தறித் துண்டும், கிரைக்மோர் தி. மு. கழகம், முத்தமிழ் மன்றம் ஆகியவற்றின் சார்பில் மாலைகளும் தோழர் அன்பழகனுக்கு அணிவிக்கப்பட்டன.

நான்சச் :

இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 8—5—55 காலை 9 மணி அளவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. செயலாளர் தோழர் தங்கராசு தலைமை வகித்தார். தோழர் க. அன்பழகன் அவர்கள், கழகத்தின் இலட்சியத்தை விளக்கி சொற்பொழிவாற்றினர். ஆர்ச்செடின், பென்காம் கிளைக் கழகங்கள் அன்பழகன் அவர்கட்கு மாலைகள் அணிவித்தன.

கிளென்டேல் :

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் 8—5—55 பகல் 3 மணி அளவில் மே தின விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் செல்லப்பன் தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். எஸ். ஆகன், எஸ். அய்யுப் (தென்னன்) வி. க. ஒளியழகன் ஆகியோர் பேசிய பின் தோழர் க. அன்பழகன் அவர்கள், மே தினம் கொண்டாடுவதன் அவசியத்தைப் பற்றியும், தி. மு. கழகம் தொழிற் சங்கங்களை நடத்தத் தீர்மானித்துள்ளதைப் பற்றியும் விளக்கிப் பேசினர்.

உதகை :

9—5—55 மாலை 3 மணி அளவில், உதகை தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். அய்யுப் (தென்னன்) தலைமை வகித்தார். தோழர் க. அன்பழகன் திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும், தி மு. கழகத்தின் போராட்டங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். அதன் பின், இந்நகர் 'அண்ணா முரசொலி மன்ற'த்தைப் பார்வையிட்டார். அவ்வமயம் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது. தோழர் அன்பழகன் மன்றத்தாருக்கு தனது பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்.

குன்னூர் :

இந்நகர் தி. மு. கழகச் சார்பில் 10—5—55 மாலை 5 மணியளவில் மே தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தோழர் எஸ். அய்யுப் (தென்னன்) தலைமை வகித்தார். தோழர்கள், தி. ச. முருகேசன், கோத்தகிரி, க. அன்பன், வி. க. ஒளியழகன், எஸ். எஸ். ஆகன் ஆகியோர் பேசியபின் தோழர் க. அன்பழகன் அவர்கள் 'மே தினமும் திராவிடர்களும்' என்னும் தலைப்பில் விளக்கவுரையாற்றினர்.

கொண்டங்காடு தி. மு க.

11-5-55 இரவு 9-மணிக்கு செல்வம் நூல் நிலையத்தில்,தோழர் து. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு நன்றியும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொண்ட பின்னர், இம்மாத இறுதிக்குள் ஒருபொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

ரஷ்யத் தலைவர்களின் 'துணிகர முடிவு'

யூகோ அதிபர் டிட்டோ பாராட்டு

"ரஷ்யத் தலைவர்களுடன் நடத்தப்போகும் பேச்சு வார்த்தைகள் உலக சமாதானத்தை உருவாக்குவதற்குப் பேரளவு பயன்படும்; ஒரு சுதந்திர நாடாக, சம உரிமையுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

"நமது உள்நாட்டு விவகாரத்தில் எவரையும் தலையிட நாம் அனுமதிக்க மாட்டோம்,"

—என்று, யூகோ அதிபர் மார்ஷல் டிட்டோ கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் சொன்னார்:—

"திரைக்குப் பின்னால் நாடகமாட நாங்கள் விரும்பவில்லை. உலகத்தின் கண்முன் புதான் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்; அப்போது, நாங்கள் எப்படிப் பட்டவர்களென்பதை மேற்கு நாடுகள் அறிந்துகொள்ளலாம்."

"ரஷ்யாவிற்கும் — யூகோவிற்கும் இடையில் உள்ள தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடவும், இரு நாடுகளின் உறவுகளையும் இயல்பான முறைக்குக் கொண்டு வரவுமான வகையில் சோவியத் தலைவர்கள் யூகோவுக்கு வர மேற்கொண்டுள்ள 'துணிகரமான' முடிவை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்."

★

ரஷ்யத் தலைவர்கள்

டிட்டோவை சந்திக்க பெல்கிரேட் வருகை?

ரஷ்யப் பிரதமர் புல்கானின், சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் குருஷ்சேவ், முதல் துணைப் பிரதமர் மிக்கோயன் ஆகிய மூன்று முக்கிய தலைவர்களும், இம்மாத இறுதியில் யூகோஸ்லேவியத் தலைநகரான பெல்கிரேடுக்கு வருகை தருவார்கள் என்று தெரியவருகிறது.

சோவியத் — யூகோஸ்லேவியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவை மேலும் அபிவிருத்தி செய்துகொள்வதற்கும், சமாதானத்தை உறுதி செய்துகொள்வதற்கும் பெல்கிரேடில், உயர்தர முறையில் சந்தித்துப் பேச இரு நாடுகளும் தங்கள் தங்கள் ஒப்புதலைத் தந்துள்ளதாகப் பத்திரிகை அறிவிப்புகள் தெரிவித்திருக்கின்றன.

[குறிப்பு:— சோவியத் ஆட்சி முறைக்கு எதிராக யூகோ தலைவர் மார்ஷல் டிட்டோ தனிக்கொடி கண்டும் இதர ஐரோப்பிய நாட்டவருடன் நட்புறவு பூண்டிருப்பதும் குறிப்பிடத் தகுந்தது.]

மரங்களை வெட்டுவதைத் தடுக்க ஒரு சட்டம்

மரங்களைக் கண்டபடி வெட்டுவதைத் தடுக்க இந்தியா முழுமைக்கும் ஒரு சட்டம் கொண்டுவரப்படலாம் என்று மத்திய விவசாய அமைச்சர் டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் குறிப்பிட்டிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

மணக்கால் (அய்யம்பேட்டை)

கடைத் தெருவில்

18—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஆர். விசயராகவன்

பேசுவோர்:

என். வி. நடராசன்

டி. கருணாநிதி

★

அண்டகத்துறை

18—5—55 மாலை 5 மணிக்கு கருவக்குளம் திடலில், தோழர் இரா. சங்கரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ந. தருமலிங்கம், என். ஆர். இராசகோபாலன், மு. அ. செங்குட்டுவன், டி. எஸ். கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

★

பந்தநல்லூர்

18—5—55 மாலை 5 மணிக்கு கடைத் தெருவில், தோழர் கோ. வரதராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அறிவழகன், பொ. தருமன், ம. கோமணி, சு. சீனுவாசன் ஆகியோர் பேசுவர்.

மே விழா

18—5—55 மாலை 6 மணிக்கு திருவிடமருதூர் மேல வீதியில், தோழர் எ. வெங்கிடாசலம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். கிட்டப்பா, சௌந்திரராசன், கோ. சி. மணி, இராசமாணிக்கம், கோ. நாராயணசாமி, டி. எஸ் இராசப்பா, டி. எ. இராமசாமி ஆகியோர் பேசுவர்.

சென்னை 43-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

17—5—55 இரவு 8 மணிக்கு. 43-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

17—5—55 இரவு 9 மணிக்கு. சேலம் 13-வது வட்டம் கல்லாங்குத்து கிளைக் கழகத்தில், சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

நரிவளையில் 10 ஆண்டு வசித்த கொரியர்

எவருடனும் பேசினதே கிடையாதாம்!

பத்தாண்டு காலமாக நரி வளை ஒன்றிலேயே வசித்து வந்த மனிதர் ஒருவரை, அண்மையில் அசனுருவம் கிராம மக்கள் பிடித்திருக்கின்றனராம்.

அவர், கடந்த 10 ஆண்டுகளாக எவருடனும் பேசினது கிடையாது என்றும், அவருக்கு மனைவியும், குழந்தைகளும் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அவர், நரி வளை வாசியாக மாறினதற்குக் காரணமாக ஒரு 'கதை'யும் கூறப்பட்டிருக்கிறது.

'பெலிலூ' என்ற பசிபிக் தீவில் விமான நிலையம் ஒன்றைக் கட்ட கெய்கிடோகு கோயா என்ற கொரியர் ஒருவரை ஜப்பானியர் பலாத்காரமாக அனுப்பினராம்; ஆனால், அந்தக் கொரியாவாசி அந்நகரில் இறங்கு முன்னமேயே அங்கு அமெரிக்கர்கள் வந்திறங்கியிருக்கின்றனர். அதனால் அவர் அச்சமுற்று, என்ன செய்வதென்றே தெரியாமல் திண்டாடி, எந்த மறைவிடமும் கிடைக்காத காரணத்தால், ஒரு நரிவளைக்குள் 'சரணாகதி' அடைய நேரிட்டதாம்! அன்றிலிருந்து இதுநாள் வரையிலும் வேறு எவருடனும் அவர் பேசினதே கிடையாதாம்.

தற்போது கொரியாவிலுள்ள தமது மனைவியையும், குழந்தைகளையும் அந்த இடத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர் விருப்பம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியைத் திணிக்கும் காங்கிரஸ் கொள்கையில் மாறுதல் இல்லை!

தலைவர் தேபர் தெளிவுபடுத்துகிறார்

மீனம்பாக்கம் (சென்னை) மே 15—

"பண்டித பந்த் அண்மையில் மக்கள் சபையில் இந்தி பற்றி தந்த அறிக்கை, நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளது; குழப்பத்திற்கு மேலும் இடமில்லை,"

என்று, காங்கிரஸ் தலைவர் தேபர் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"ஆஜ்மீர் காங்கிரஸ் தீர்மானத்தை ஒட்டி, பெர்காம்பூரில் கூடிய காங்கிரஸ் செயற் குழு நிறைவேற்றிய தீர்மானம் மிகத் தெளிவானதாகும்;

"இந்திய சர்க்கார் வெளியிட்ட சுற்றறிக்கைதான் குழப்பத்திற்கான காரணம் என்று தெரிகிறது; நிலைமை இப்போது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசின் கொள்கையில் எவ்வித மாறுதலும் இல்லை;

"மத்திய 'சர்வீஸ் கமிஷன்' தேர்வுகள், இந்தி அல்லது பிரதேச மொழிகளில் நடைபெறும்; இது எல்லோரையும் திருப்திப்படுத்தும் என்று நான் கருதுகிறேன்;

"மொழிப் பிரச்சினை பற்றி விரிவான தீர்மானமும் இருக்கிறது; அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைக்கு மாறாக விதிவிலக்கு கோர முடியாது."

★

இலங்கை சர்க்கார் போக்கிற்கு!

தலைமை உயர் நீதிமன்றம் சூடு

கொழும்பு, மே 13—

குடியுரிமை பற்றிய முக்கியமான வழக்கொன்றில் இலங்கை தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி சான்சன் தீர்ப்பளித்திருக்கிறார்.

வழக்கு விவரமாவது:— பழனியாண்டி என்ற பெயருடைய ஒருவர் தன்னையும், தன் மனைவி, நான்கு குழந்தைகளையும் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனக் கோரி இலங்கை கமிஷனரிடம் மனுச் செய்திருந்தார்; தான் தொடர்ந்து இலங்கையிலேயே வசித்து வந்திருப்பதற்கு நிரூபணமாக, தொழிலாளர் இலாகா ரெஜிஸ்தரைக் காட்டினார்; ஆனால் பதிலை உதவி கமிஷனர், அந்த நிரூபணம் போதாதென்று கூறி, அவருடைய குடியுரிமை மனுவை நிராகரித்துவிட்டார். அதன் பேரில் மேற்படியார், தலைமை உயர் நீதி மன்றத்திடம் அப்பீல் செய்திருந்தார்.

அப்பீல் மனுவை விசாரித்த நீதிபதி சான்சன், தொழிலாளர் இலாகா ரெஜிஸ்தரில் உள்ள பதிவும், வாய் மொழியான அத்தாட்சியுமே போதுமான நிரூபணங்களாகுமென்றும், ஆகவே அவரையும், அவரது மனைவி, 4 குழந்தைகளையும் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்துகொள்ளும்படியும் உதவி கமிஷனருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

பழனியாண்டி எனப்படுபவர் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவராம். பிறந்த நாள்தொட்டு இதுவரையிலும் அவர் இலங்கையை விட்டு வேறு எங்குமே சென்றது கிடையாதாம்

புகழுரையில் புதைந்திருக்கும் நஞ்சு

கோவை, மே 14—

"நான் தமிழ் மக்களை இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ள மாட்டேன்; ஏனெனில், அவர்கள், ஆங்கிலத்தைப் போல் இந்தி மொழியிலும் 'பாண்டித்தியம்' பெற்றுவிட்டால், வட நாட்டிலிருக்கும் மக்களுக்கு, சர்க்கார் உத்தியோகங்களுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்காமற் போய்விடும்,"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா, கூட்டமொன்றில் பேசுகையில் பலத்த சிரிப்புக்கிடையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"சில ஆண்டுகட்கு முன்பு காசியில் ஒரு கல்லூரி திறக்கப்பட்டது; அதில் சில தமிழ் மாணவர்களும் சேர்ந்தனர்; துவக்கத்தில் அவர்கள் இந்தி தெரியாதவர்களாயிருந்தனர்; ஆனால், ஆறு மாத காலத்திற்குள், அவர்கள் இந்தி மொழியில் திறன் பெற்றுவிட்டனர்; நான் மூன்றாண்டு காலமாக சென்னையில் தங்கியிருந்தும், இரண்டு வார்த்தைகூட தமிழில் பேச கற்றுக்கொள்ளவில்லை"

திருக்குறளுக்கு புதிய விளக்க உரை எழுதியதற்காக நாமக்கல் கவிஞருக்கு பாராட்டுரை வழங்க நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசும்போதே அவர், தமிழர்கள் வெளிநாட்டு மொழிகளைக் கற்றுத திறம் பெறும் திறமை குறித்துக் குறிப்பிட்டிக்கிறார்.

'குதிரை வண்டி பொது இடமல்ல!'

பெல்காம், மே 14—

"மதுவிலக்குச் சட்டத்தில் உள்ளபடி, ஒரு குதிரை வண்டி பொது இடமாகக் கருதப்பட முடியாது,"

என்று, பெல்காம் கண்டோன்மெண்ட் நீதிபதி குடி வழக்கொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

குதிரை வண்டியில் பிரயாணம் செய்கையில் முகுந்த் மல்க்ராஜ் ஜதாவ் என்பவர் குடித்ததாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

நீதிபதி, அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"தன்னைத் தானே கவனித்துக் கொள்ள முடியாத நிலை தடுமாறும் அளவிற்கு அவர் குடித்திருக்கவில்லை," என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளாராம்.

பண்டிதர்—பாக். பிரதமர் பயனற்ற உரையாடல்!

தொடர்ந்து நடைபெறுகிறது

புதுடில்லி, மே 15—

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி, இந்தியாவிற்கு நேற்றைய தினம் வந்து இந்தியப் பிரதமர் பண்டித நேருவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார். அவர் குடியரசுத் தலைவரையும் சந்தித்திருக்கிறார்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற உரையாடலின் சாராம்சங்கள் வெளியிடப்படாவிட்டாலும், இந்த உரையாடல்களின் விளைவாக, பிரச்சினைகளுக்கு உருவான பரிகாரம் மட்டும் உருவெடுக்காது என்று கூறப்படுகிறது.

இரண்டு நாட்களிலும், கடந்த காலத்தில் காஷ்மீர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றிய விமரிசனமாகவே இருந்தது எனவும், புதிய முயற்சிகள் பற்றி இனிதான் பேசப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

பண்டித நேருவும், அவருடன் இருக்கும் ஆசாத், பண்டித பந்த் ஆகியோரும் பிரச்சினைக்கான பரிகாரங்களை உடனுக்குடன் தெரிவிக்க முடியுமென்றாலும், பாகிஸ்தான் தலைவர்களால் அப்படி முடிவுகள் மேற்கொள்ளப்படுவது முடியாது எனத் தெரியவருகிறது.

ஏனெனில், அத்தகைய முடிவு மேற்கொள்ளும் திறம் படைத்த கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது அவர்களுடன் இருக்கவில்லை என்ற குறைபாடு உள்ளதாம்.

உரையாடல் எப்படியாகும் என்பது, அடுத்துத் தெரியலாம்

சென்னை—மீனம்பாக்கம் விமான நிலையம்

ரூ. 13.27 லட்சம் செலவில் சீரமைப்பு

சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தின் பிரதான விமானப் பாதையைச் சீர்செய்வதற்காக, இந்தியப் பேரரசு, ரூ. 13.27 லட்சம் செலவிட அனுமதி தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அவர்கள் தயாரிப்பதைப் பற்றி

இவர் சொல்கிறார்!

மணிக்குப் பத்தாயிரம் மைல் வீதம் பறந்து சென்று அமெரிக்காவைத் தாக்கும் சக்திகொண்ட வெடிகுண்டொன்றைத் தயாரிக்க சோவியத் ரஷ்யா முயற்சி செய்து வருகிறதாம். இத்தகவலை அமெரிக்கப் பிரதிநிதி சபையில் இராணுவ மானியக் குழு தலைவரான ஜார்ஜ் மாகன் தெரிவித்திருக்கிறார்.

நான்கு வல்லரசுகள் மாநாடு

ரஷ்யா ஒப்புதல் தருகிறது

நான்கு வல்லரசுகளின் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள மேற்கத்திய வல்லரசுகள் அனுப்பிய அழைப்பை சோவியத் ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ரஷ்யாவின் சார்பில் வெளி நாட்டு மந்திரி மாலடோவ் அழைப்பை ஒப்புக்கொண்டதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"ஐசனோவர், அந்தோனி ஈடன் (தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பதவிக்கு வந்தால்) எட்கார் பாரே, மார்ஷல் புல்கானின் ஆகிய நால்வரும், உலகத்தின் முன்னுள்ள பெரும் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கான புதியதொரு முயற்சியில் ஈடுபட சீக்கிரமே கூடிப்பேச வேண்டும்," என்று, ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்ட அழைப்பில் காணப்பட்டிருந்ததாம்.

நான்கு நாடுகளின் வெளிநாட்டிலாகா மந்திரிகளும், தங்கள் நாட்டுத் தலைவர்களுடன் மாநாட்டில் கலந்து கொள்வர் என்றும், அவர்கள் இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்கூட்டியே சந்திப்பர் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.